[பேரவைத் துணைத்தலைவர்] [1981 மார்ச் 24

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 25-3-1981 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

233. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படத்) துறையின் 5-6-1980 ஆம் தேதியிட்டப் பெற்ற 1591 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

234. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 24-4-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1295 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

235. தருமபுரி மாவட்டம் ஹரூர் திருமதி டி. முத்துலட்சுமிக்குச் சொந்தமான டி.எம்.கியூ. 901 ஆம் பதிவெண்ணுடைய பயணியர் சிறு பேருந்தைப் பொறுத்த வரையில் செலுத்தத் தக்க வரியைக் குறைப்பது குறித்தும், செலுத்தத் தக்க வரியின் மீது மேல் வரி விதிப்பது குறித்தும் உள் துறையின் (போக்கு வரத்து-1) 12-1-1981 ஆம் தேதியிடப் பெற்ற 68 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

236. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 26-12-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2838 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 32 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1981 மார்ச் 24]

237. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு பதிப்புரிமை எழுத்தாளர் உரிம விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 21-1-1981 ஆம் தேதியிடப் பெற்ற 57 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89 'அ' (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

238. பல்லவன் பொறியியல் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/956) 619-'அ' பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

93. 1980-81 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ் ஆங்கிலம்).

94. 1980-81 ஆம் ஆண்டில் கூடுதல்செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

*95. 1980-81 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS